# Uber தவறான வகைப்படுத்தல் குறித்த வர்க்க நடவடிக்கை சான்றிதழ் அறிவிப்பு

<u>ஜனவரி 1, 2012 முதல் ஏதேனும் நேரத்தில் பயணிகளை ஏற்றிச் செல்ல மற்றும்/அல்லது டெலிவரி சேவைகளை வழங்க Uber செயலியைப் பயன்படுத்தினால், உங்கள் சட்ட உரிமைகள் பாதிக்கப்படலாம். இந்த அறிவிப்பை நீங்கள் கவனமாக படிக்க வேண்டும்.</u>

இந்த அறிவிப்பு www.uberlawsuit.ca என்ற இணையதளத்தில் பின்வரும் மொழிகளில் கிடைக்கிறது: அரபு, மாண்டரின், இந்தி, கான்டோனீஸ், பஞ்சாபி, தகலாக், உருது, கொரியன், தமிழ் மற்றும் ஸ்பானிஷ்.

---

## 1. வர்க்க நடவடிக்கைக்கான சான்றிதழ்

ஆகஸ்ட் 12, 2021 அன்று, CV-17-567946-00CP என்ற நீதிமன்றக் கோப்பு எண்ணுடன் *Heller v Uber Technologies Inc*, என அழைக்கப்படும் ஒரு நடவடிக்கை, ஒன்டாரியோ உயர் நீதிமன்றத்தின் ("நீதிமன்றம்" ) உத்தரவின்படி வர்க்க நடவடிக்கையாகச் சான்றளிக்கப்பட்டது. இதன் பொருள், சான்றளிக்கப்பட்ட பொது சிக்கல்கள் (www.uberlawsuit.ca இல் விவரிக்கப்பட்டுள்ளன) வர்க்க உறுப்பினர்களின் சார்பாக (கீழே வரையறுக்கப்பட்டுள்ளது) நீதிமன்றத்தின் உத்தரவுகுட்பட்டு, பொதுச் சிக்கல்கள் குறித்த விசாரணை எனப்படும் ஒற்றை விசாரணையில் முயற்சிக்கப்படும். இந்த உத்தரவு டேவிட் ஹெல்லர் மற்றும் ஃபெலிசியா கார்சியா ஆகியோரை வர்க்கத்தினருக்கான பிரதிநிதி வாதிகளாக நியமித்தது.

## 2. இந்த வர்க்க நடவடிக்கை எதைப் பற்றியது

பிரதிநிதி வாதி டேவிட் ஹெல்லர் டெலிவரி சேவைகளை வழங்க Uber செயலியைப் பயன்படுத்தினார், மேலும் பிரதிநிதி வாதி ஃபெலிசியா கார்சியா பயணிகளை ஏற்றிச் செல்லவும் டெலிவரி சேவைகளை வழங்கவும் Uber செயலியைப் பயன்படுத்துகிறார்.

இவ்வழக்கின் பிரதிவாதிகள் Uber Technologies Inc., Uber Canada Inc., Uber B.V., Rasier Operations B.V., மற்றும் Uber Portier B.V. (ஒட்டுமொத்தமாக "Uber" என

குறிப்பிடப்படுகிறது). Uber என்பது ஒரு தொழில்நுட்ப நிறுவனமாகும், இது பிறவற்றுக்கு மத்தியில், கணினி மென்பொருள் செயலிகளை உருவாக்கி உரிமம் அளிக்கிறது (இது "Uber செயலிகள்" எனக் குறிப்பிடப்படுகிறது). ஒன்டாரியோ முழுவதும் மூன்றாம் தரப்பினருக்கு போக்குவரத்து மற்றும் டெலிவரி சேவைகளை வழங்க Uber செயலிகளைப் பயன்படுத்தும் ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்யும் நபர்களுடன் Uber சேவை ஒப்பந்தங்களை மேற்கொள்கிறது.

திரு. ஹெல்லர் மற்றும் திருமதி. கார்சியா, தங்களின் சார்பாகவும் கீழே விவரிக்கப்பட்டுள்ள நபர்களின் வர்க்கத்தினரின் சார்பாகவும், ஒன்டாரியோ *வேலைவாய்ப்புத் தரநிலைச் சட்டத்தை* மீறியதற்காகவும் ஒப்பந்தத்தை மீறியதற்காகவும் Uber நிறுவனத்திடம் இருந்து இழப்பீடு கோருகின்றனர். திரு. ஹெல்லர் மற்றும் திருமதி. கார்சியாவின் முதன்மைக் கூற்று என்னவென்றால், Uber செயலி மூலம் போக்குவரத்து மற்றும் டெலிவரி சேவைகளை வழங்கும் ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்பவர்களை சுயாதீனமான ஒப்பந்தக்காரர்கள் என்று Uber தவறாக வகைப்படுத்தி, ஒன்டாரியோ *வேலைவாய்ப்புத் தரநிலைச் சட்டத்தின்* கீழ் ஊழியர்களாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளை சட்டவிரோதமாகக் கொடுக்காமல் உள்ளது.

ஓட்டுனர்கள் மற்றும் டெலிவரி செய்பவர்கள் Uber இன் ஊழியர்கள் அல்ல என்று வாதிகளின் கூற்றுகளுக்கு Uber பதிலளித்துள்ளது. மாறாக, Uber இன் ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்பவர்கள் Uber இன் வாடிக்கையாளர்கள் என்று Uber வாதிடுகிறது, இவர்கள் Uber செயலியைப் பயன்படுத்தி தங்கள் வாடிக்கையாளர்களுக்கு போக்குவரத்து மற்றும் டெலிவரி சேவைகளை வழங்குவதன் மூலம் பணம் சம்பாதிக்கிறார்கள் என்றும் Uber கூறுகிறது. Uber இன் நிலைப்பாடு என்னவென்றால், ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்பவர்கள் பணியாளர்கள் அல்ல; ஏனெனில் அவர்கள் Uber செயலிகளை எப்போது வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் தேர்வு செய்யலாம்; ஷிப்ட்டுகள் அல்லது பணிப்பொறுப்புகள் ஏதுமில்லாமல் அவர்கள் செயலியைப் பயன்படுத்த அவர்களுக்கு இலகுத்தன்மை உள்ளது; அவர்கள் கோரிக்கைகளை நிராகரிக்கலாம்; வேறு ஏதேனும் சவாரிப் பகிர்வு செயலிகள் அல்லது உணவு விநியோகச் செயலிகளைப் பயன்படுத்தலாம் அல்லது வேறு ஏதேனும் தொழில் அல்லது வணிகத்தில் ஈடுபடலாம்; அவர்களுக்கு மேலாளர் என்று யாரும் இல்லை; அவர்கள் தங்கள் சொந்த

போக்குவரத்து முறையைத் தேர்வுசெய்யலாம்; மேலும் அவர்கள் சீருடை அணியத் தேவையில்லை. ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்பவர்கள் அனைவரும் Uber உடன் ஒரே மாதிரியான அனுபவத்தையும் தொடர்பையும் கொண்டிருக்காததால், ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்பவர்களின் வேலை நிலையைப் பொதுவாக தீர்மானிக்க முடியாது என்ற நிலைப்பாட்டை Uber எடுக்கிறது.

வர்க்கத்தினர் வெற்றி பெற்றால், Uber மற்றும் வர்க்க நடவடிக்கையில் பங்கேற்கும் ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்யும் நபர்களுக்கு இடையே இருக்கும் ஒப்பந்த உறவு மாற்றியமைக்கப்படும். இந்த ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்யும் நபர்கள் Uber இன் வாடிக்கையாளர்கள் அல்லது சுயாதீன ஒப்பந்ததாரர்கள் என வகைப்படுத்தப்படுவதற்குப் பதிலாக, Uber இன் ஊழியர்களாக வகைப்படுத்தப்படுவார்கள், மேலும் Uber செயலியைப் பயன்படுத்தும்போது அவர்கள் "Uberக்காக வேலை செய்பவர்களாக" கருதப்படுவார்கள்.

பொதுச் சிக்கல்கள் குறித்த விசாரணையில், நீதிமன்றம் பின்வரும் முடிவுகளில் ஒன்றன் (அல்லது அவற்றின் கலவையுடைய) தீர்மானத்திற்கு வரும்:

1. ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்யும் நபர்கள் (அல்லது அவர்களில் சிலர்) Uber இன் வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் அல்ல;

2. ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்யும் நபர்கள் (அல்லது அவர்களில் சிலர்) சுயாதீன ஒப்பந்தக்காரர்கள், ஊழியர்கள் அல்ல;

3. ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்யும் நபர்கள் (அல்லது அவர்களில் சிலர்) Uber இன் ஊழியர்கள்; அல்லது

4. அனைத்து ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்யும் நபர்களுக்கும், அவர்களின் வேலை நிலையை பொதுவாக தீர்மானிக்க முடியாது, ஆனால் தனிப்பட்ட விசாரணைகள் தேவைப்படும்.

வர்க்கத்தினரின் குறைந்தபட்ச ஊதியம், விடுமுறை ஊதியம், பொது விடுமுறை மற்றும் பிரீமியம் ஊதியம், பணிநீக்க ஊதியம் மற்றும் சாத்தியமான கூடுதல் நேர ஊதியம் ஆகியவற்றை Uber செலுத்தத்

தவறியது தொடர்பாக வர்க்கத்தினர் நஷ்டஈடு கோருகின்றனர். Uber செயலிகள் மூலம் போக்குவரத்து மற்றும் டெலிவரி சேவைகளை வழங்கும்போது ஏற்படும் கைக்கு அடங்காத செலவுகள், அவற்றின் தவறான வகைப்படுத்தலின் விளைவாக ஏற்படும் ஏதேனும் பாதகமான வரிப் பொறுப்புகள் மற்றும் செலுத்தப்படாத *கனடா ஓய்வூதியத் திட்டம்* மற்றும் *வேலைவாய்ப்புக் காப்பீட்டுச் சட்டப் பங்களிப்புகள்* ஆகியவை தொடர்பாக இந்த வர்க்கத்தினர் நஷ்டஈடு கோருகின்றனர். பொதுச் சிக்கல்கள் குறித்த விசாரணைக்குப் பிறகு நடைபெறும் தனிப்பட்ட மதிப்பீடுகளைப் பொறுத்து, செலுத்த வேண்டிய நஷ்ட ஈடுகளின் தொகை (ஏதேனும் இருந்தால்) இருக்கும் என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

திரு. ஹெல்லர் மற்றும் திருமதி. கார்சியா மூலம் வலியுறுத்தப்பட்ட உரிமைகோரல்களின் உண்மைத்தன்மை அல்லது தகுதிகள் அல்லது அந்த உரிமைகோரல்களுக்கு Uber இன் எதிர்வாதம் குறித்து நீதிமன்றம் எந்த நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை. திரு. ஹெல்லர் மற்றும் திருமதி கார்சியா ஆகியோர் கூறிய குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் இன்னும் நிரூபிக்கப்படவில்லை.

### 3. வர்க்கத்தினர்

நீதிமன்ற உத்தரவின்படி, இந்த வழக்கில் வர்க்கத்தினர் என்பதன் விளக்கம் பின்வருமாறு:

> ஜனவரி 1, 2012 முதல், Uber B.V., Rasier Operations B.V., மற்றும்/அல்லது Portier B.V உடனான சேவை ஒப்பந்தத்தின்படி, ஒன்டாரியோவில் பயணிகளை ஏற்றிச் செல்ல மற்றும்/அல்லது டெலிவரி சேவைகளை வழங்க Uber செயலியைப் பயன்படுத்திய ஏதேனும் ஒரு நபர்.
>
> "சேவை ஒப்பந்தம்" என்பது: பின்வரும் Uber செயலிகளைப் பயன்படுத்தி பின்வரும் சேவைகளில் ஏதேனும் அல்லது அனைத்தையும் வழங்க Uber B.V., Rasier Operations B.V. மற்றும்/அல்லது Portier B.V. உடன் செய்துக் கொண்ட ஒப்பந்தம் ஆகும்: Uber Eats, UberX, UberXL, Uber Comfort, Uber Black, Uber SELECT , Uber Black SUV, Uber Premier, Uber Premier SUV, Uber Taxi, Uber WAV, Uber Assist, Uber Pool, Uber Green, மற்றும் Uber Connect.

நீங்கள் மேற்குறிப்பிட்ட வர்க்கத்தினரின் வரையறைக்குள் வந்தால், நீங்கள் தானாகவே வர்க்க நடவடிக்கையில் சேர்க்கப்படலாம். இந்த வர்க்க நடவடிக்கையிலிருந்து விலக, மே 28, 2024 க்குள் www.uberlawsuit.ca இல் "விலகுதல்" படிவத்தைப் பூர்த்தி செய்யலாம் அல்லது விலகுவதற்கான எழுத்துப்பூர்வ கோரிக்கையை info@uberlawsuit.ca என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது கீழே பட்டியலிடப்பட்டுள்ள முகவரிக்கு அஞ்சல் முத்திரையுடன் அனுப்பலாம்.

**அஞ்சல் முகவரி:** Samfiru Tumarkin LLP
ப: Uber ஓட்டுநர் தவறான வகைப்படுத்தல் குறித்த வர்க்க நடவடிக்கை
350 பே ஸ்ட்ரீட், 10வது மாடி
டொராண்டோ, ON M5H 2S6

விலகுவதற்கான உங்கள் எழுத்துப்பூர்வ கோரிக்கையில் பின்வருவன இடம்பெற்றிருக்க வேண்டும்: உங்கள் பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி எண், உங்கள் கோரிக்கையின் தேதி மற்றும் நீங்கள் Uber வர்க்க நடவடிக்கையிலிருந்து விலக விரும்பும் வாக்குமூலம்.

**ஆகஸ்ட் 26, 2020 நிலவரப்படி, Uber செயலியைப் பயன்படுத்தும் ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்பவர்களுக்கான முக்கிய குறிப்பு:**

ஆகஸ்ட் 26, 2020 தேதியிட்ட திருத்தப்பட்ட சேவை விதிமுறைகளைப் பெற்ற மற்றும் ஏற்றுக்கொண்ட ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்யும் நபர்களை இந்த வர்க்கத்தினரில் சேர்க்கலாம் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்தத் திருத்தப்பட்ட சேவை விதிமுறைகள் நடுவர் தீர்ப்பு விதியைக் கொண்டுள்ளன, அதன்படி ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்பவர்கள் நடுவர் சட்டத்தில் இருந்து விலகும் வரை, வர்க்க நடவடிக்கை உட்பட எந்தவொரு கூட்டு நடவடிக்கையில் பங்கேற்பதை அல்லது மீட்பு நடவடிக்கையில் பங்கேற்பதை இது தடை செய்கிறது. அதன்படி, ஆகஸ்ட் 26, 2020 சேவை விதிமுறைகளை நீங்கள் ஏற்றுக்கொண்டிருந்து, இந்த வர்க்க நடவடிக்கையில் பங்கேற்க விரும்பவில்லை என்றால், மேலே விவரிக்கப்பட்ட விலகல் நடைமுறைகளின்படி நீங்கள் விலக வேண்டும்.

ஆகஸ்ட் 26, 2020 சேவை விதிமுறைகளை நீங்கள் ஏற்றுக்கொண்டு, இந்த வர்க்க நடவடிக்கையில் பங்கேற்க விரும்பினால், ஆகஸ்ட் 26 2020 சேவை

விதிமுறைகளை ஏற்றுக்கொண்டதால், Uber நிறுவனத்திடம் இருந்து இழப்பீடு கோருவதற்கான உங்கள் உரிமையை நீங்கள் தள்ளுபடி செய்துள்ளீர்கள் என்ற எதிர்வாதத்தை நீங்கள் சந்திக்க நேரிடும். பொது சிக்கல்கள் குறித்த வழக்கு விசாரணை (அல்லது ஏதேனும் அடுத்தடுத்த மேல்முறையீடு) வர்க்கத்தினருக்குச் சாதகமாகத் தீர்மானிக்கப்பட்டால், பொது சிக்கல்கள் குறித்த வழக்கு விசாரணையைத் தொடர்ந்து தனிப்பட்ட சிக்கல்கள் குறித்த வழக்கு விசாரணைகளில் இந்த எதிர்வாததின் தகுதிகள் குறித்து தீர்மானிக்கப்படும். இந்தத் தனிப்பட்ட சிக்கல்கள் குறித்த வழக்கு விசாரணைகளில் நீங்கள் நடுவர் விதிக்குக் கட்டுப்பட வேண்டுமா என்ற தீர்மானம் இடம்பெறும், அப்படியானால், பிரதிவாதிகளிடமிருந்து எந்த நிவாரணத்தையும் பெற நீங்கள் அனுமதிக்கப்படாமல் போகலாம்.

## 4. வர்க்க நடவடிக்கையில் இருந்து விலகுதல்

வகுப்பு நடவடிக்கையிலிருந்து விலகுவதற்கான காலக்கெடு மே 28, 2024 ஆகும். விலகுவதற்கான உங்கள் எழுத்துப்பூர்வ கோரிக்கை அந்தத் தேதிக்குள் பெறப்படவில்லை என்றால், நீங்கள் வர்க்கத்தினரின் உறுப்பினராகவே இருப்பீர்கள். நீங்கள் வர்க்கத்தினரின் உறுப்பினராக இருக்க விரும்பினால், இந்தக் கட்டத்தில் நீங்கள் எதுவும் செய்ய வேண்டியதில்லை.

நீங்கள் ***விலகிக் கொண்டால்***, வர்க்க நடவடிக்கையில் பங்கேற்க நீங்கள் தகுதி பெற மாட்டீர்கள் (வாதிகளின் தரப்பு வெற்றி பெற்றதாகக் கருதி, இதில் தீர்வு அல்லது நீதிமன்றத் தீர்ப்பு ஆகியன அடங்கும்) மற்றும் வர்க்க நடவடிக்கையில் பிறப்பிக்கப்பட்ட எந்த நீதிமன்ற உத்தரவுகளுக்கும் நீங்கள் கட்டுப்பட மாட்டீர்கள். அது சாதகமாக இருந்தாலும், சாதகமாக இல்லையென்றாலும் சரி. எவ்வாறாயினும், இந்த அறிவிப்பில் விவாதிக்கப்பட்ட உரிமைகோரல்கள் (எதிர்வாதிகள் கொண்டிருக்கும் ஏதேனும் எதிர்வாதத்திற்கு உட்பட்டு) தொடர்பாக, எதிர்வாதிகளுக்கு எதிராக நீங்கள் சொந்தமாக வழக்காடல் செய்ய முடியும்.

நீங்கள் ***விலகிக்கொள்ளவில்லை*** என்றால், நீங்கள் வர்க்க நடவடிக்கையில் பங்கேற்கக்கூடும் (வாதிகள் பெற்றதாகக் கருதி, கிடைக்கப்பெறும் தீர்வு அல்லது நீதிமன்றத் தீர்ப்பு ஆகியன அடங்கும்),

மற்றும் வர்க்க நடவடிக்கையில் பிறப்பிக்கப்பட்ட எந்த நீதிமன்ற உத்தரவுகளுக்கும், நீங்கள் கட்டுப்படுவீர்கள். அது சாதகமாக இருந்தாலும், சாதகமாக இல்லையென்றாலும் சரி. ஆகஸ்ட் 26, 2020 நடுவர் விதியை நீங்கள் ஒப்புக்கொண்டீர்களா இல்லையா என்பதைப் பொறுத்தும், நடுவர் விதி செல்லுபடியாகும் என்று நீதிமன்றம் அல்லது நடுவர் முடிவு செய்கிறார்களா என்பதைப் பொறுத்தும் வர்க்க நடவடிக்கையில் உங்கள் பங்கேற்பு இருக்கலாம். நீங்கள் வர்க்க நடவடிக்கையில் பங்கேற்க முடிந்தால், வர்க்க நடவடிக்கையில் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுகள் சாதகமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் நீங்கள் அவற்றுக்குக் கட்டுப்படுவீர்கள். இருப்பினும், இந்த அறிவிப்பில் விவாதிக்கப்பட்டுள்ள அதே உரிமைகோரல்கள் (வழக்கின் இறுதி முடிவைப் பொருட்படுத்தாமல்) தொடர்பாக, நீங்கள் எதிர்வாதிகளுக்கு எதிராக சொந்தமாக வழக்காடல் செய்ய முடியாது.

## 5. நிதி தொடர்பான விளைவுகள்

பொதுச் சிக்கல்கள் விசாரணையில் வர்க்கத்தினருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்தால், அல்லது அதற்குப் பிறகான மேல்முறையீட்டில் வர்க்கத்தினருக்கு சாதகமாகத் தீர்ப்பு வந்தால், சில வர்க்க உறுப்பினர்கள், மேற்படி தனிப்பட்ட சேத நடவடிக்கைகளுக்கு பிரதிவாதிகளிடமிருந்து நிதி இழப்பீடு பெற உரிமை பெறலாம். இவ்வாறு நிகழும் பட்சத்தில், தனிப்பட்ட நிதி இழப்பீடு, ஏதேனும் இருந்தால், தனிப்பட்ட ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்யும் நபர்களின் பங்கேற்பு தேவைப்படும். ஆகஸ்ட் 26, 2020 சேவை விதிமுறைகளை ஏற்றுக்கொண்ட ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்யும் நபர்கள் Uber நிறுவனத்திடமிருந்து இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்கான உரிமையைத் தள்ளுபடி செய்ததாகத் தனிப்பட்ட சேதம் குறித்த விசாரணைகளில் எதிர்வாதங்களைச் சந்திக்க நேரிடலாம். கூடுதலாக, பொதுச் சிக்கல்கள் குறித்த விசாரணையில் வர்க்கத்தினருக்குச் சாதகமாகத் தீர்ப்பு கிடைத்தால், வர்க்க ஆலோசகருக்கான சட்டக் கட்டணம் மற்றும் செலவினங்களின் தொகையையும் நீதிமன்றம் தீர்மானிக்கும்.

பொதுவான சிக்கல்கள் குறித்த விசாரணையில் எதிர்வாதிகளுக்குச் சாதகமாகத் தீர்ப்பு கிடைத்தால், வர்க்க நடவடிக்கையில் பங்கேற்கும்

ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்யும் நபர்கள் இந்த வழக்கிலிருந்து இழப்பீடு எதையும் பெற மாட்டார்கள்.

Uber செயலி அல்லது பிற போக்குவரத்து அல்லது டெலிவரி செயலிகளைப் பயன்படுத்தி நீங்கள் வழங்கிய போக்குவரத்து அல்லது டெலிவரி சேவைகள் தொடர்பான அனைத்து தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களின் நகல்களை நீங்கள் வைத்திருக்க வேண்டும். அத்தகைய ஆவணங்கள் மற்றும் சான்றுகளில் ஏதேனும் போக்குவரத்து அல்லது டெலிவரி செயலி நிறுவனங்களுடனான உங்கள் ஒப்பந்தங்களின் நகல்கள், செயலிகள் மூலம் போக்குவரத்து அல்லது டெலிவரி சேவைகளை எப்போது வழங்கினீர்கள் என்பது பற்றிய தகவல்கள், ஏதேனும் போக்குவரத்து அல்லது டெலிவரி செயலி நிறுவனங்களால் உங்களுக்கு வழங்கப்பட்ட கட்டண அறிக்கைகள், செயலியின் மூலம் நீங்கள் வழங்கிய போக்குவரத்து அல்லது டெலிவரி சேவைகள் தொடர்பான ஏதேனும் வரி ஆவணங்கள் மற்றும் செயலியின் மூலம் போக்குவரத்து மற்றும் டெலிவரி சேவைகளை வழங்கும்போது நீங்கள் செய்த கைக்கு அடங்கா செலவினங்களுக்கான ரசீதுகள் ஆகியவை இடம்பெற்றிருக்க வேண்டும்.

பிரதிநிதி வாதிகளைத் தவிர வேறு எந்த ஓட்டுனர்களும் அல்லது டெலிவரி செய்யும் நபர்களும் பொதுச் சிக்கல்களைத் தீர்மானிப்பது தொடர்பான செலவுகளுக்குப் பொறுப்பேற்க மாட்டார்கள். ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி செய்யும் நபர்கள் தனிப்பட்ட தீர்மானத்தின் முடிவைப் பொறுத்து தங்கள் சொந்தத் தனிப்பட்ட உரிமைகோரல்களின் தீர்மானம் தொடர்பான செலவுகளுக்கு பொறுப்பாவார்கள்.

வர்க்க ஆலோசகர், சட்டக் கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பாக பிரதிநிதி வாதிகளுடன் தற்செயல் கட்டண ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளனர். வழக்கில் வெற்றி (அதாவது, தீர்வு அல்லது நீதிமன்றத்தின் ஈடாக்கத் தீர்ப்பு) பெற்றால் மட்டுமே வர்க்க ஆலோசகருக்கு பணம் வழங்கப்படும் என்று ஒப்பந்தம் கூறுகின்றது. எதிர்வாதிகளிடமிருந்து வர்க்கத்தினர் மீட்டெடுத்த மொத்தத் தொகையில் 30% சதவீதக் கட்டணம், அத்துடன் செலவினங்கள் மற்றும் பொருந்தக்கூடிய வரிகள் ஆகியவற்றை வர்க்க ஆலோசகருக்குச் செலுத்த வேண்டும் என்று ஒப்பந்தம் கூறுகிறது. வர்க்க ஆலோசகரின்

கட்டணம் மற்றும் செலவினங்கள் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இந்த வழக்கில் வழக்காடல் நிதியுதவி ஏற்பாட்டிற்கு நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது, இதில் மூன்றாம் தரப்பு நிதியளிப்பவர் அதிகபட்ச தொகை அளவுக்கு செலவினங்களுக்கானத் தொகையை முன்பணமாகச் செலுத்துவார், மற்றும் வாதிகளுக்கு எதிராக அதிகபட்சத் தொகை அளவுக்கு பாதகமான செலவுகளை வழங்குவார். நிதியுதவி வழங்குவதற்கு ஈடாக, வாதிகள் வெற்றி பெற்றாலோ அல்லது தீர்வு வழங்கப்பட்டாலோ, நிதியளிப்பவருக்கு அவர் முன்பணமாகச் செலுத்தியத் தொகை திருப்பிச் செலுத்தப்படும் மற்றும் வர்க்கத்தினருக்கு வழங்கப்படும் தொகையில் 8-10% மற்றும் நிதியாளர் நிர்வாகக் கட்டணமும் அவருக்கு வழங்கப்படும்.

## 6. கூடுதல் தகவல்

Wright Henry LLP மற்றும் Samfiru Tumarkin LLP ஆகியோர் இந்த நடவடிக்கையில் வர்க்கத்தினரின் ஆலோசகர்களாக உள்ளனர்.

www.uberlawsuit.ca தளத்தில் சான்றிதழ் உத்தரவு மற்றும் கூடுதல் தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும் தகவலுக்கு, கீழே பட்டியலிடப்பட்டுள்ளவற்றின் மூலம் Wright Henry LLP மற்றும் Samfiru Tumarkin LLP–ஐத் தொடர்பு கொள்ளவும்:

**அஞ்சல் முகவரி:** Samfiru Tumarkin LLP
ப: Uber ஓட்டுநர் தவறான வகைப்படுத்தல்
குறித்த வர்க்க நடவடிக்கை
350 பே ஸ்ட்ரீட், 10வது மாடி
டொராண்டோ, ON M5H 2S6

**தொலைபேசி:** 1-855-821-5900

**மின்னஞ்சல்:** info@uberlawsuit.ca

வர்த்தக நடவடிக்கையில் அடையக்கூடிய ஏதேனும் தீர்வு பற்றிய அறிவிப்புகள் உட்பட இந்த வர்த்தக நடவடிக்கை தொடர்பான எதிர்கால அறிவிப்புகளை நீங்கள் தொடர்ந்து பெற, இணையத்தில் பதிவு செய்யவும்: www.uberlawsuit.ca/

**இந்த அறிவிப்பு ஒன்டாரியோ உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பில் உள்ள விஷயங்கள் குறித்த எந்த கேள்விக்கும் நீதிமன்ற அலுவலகங்களால் பதிலளிக்க இயலாது.**